Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 40

திங்கட்கிழமை
05 ஜனவரி 2026

மார்கழி 21 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் -12
விலை - ரூபா 50



# புதிய கல்விச் சீரமைப்பு ஜனவரியில் நடைமுறை

## கல்வி அமைச்சர் ஹரிணி உறுதி

**கொழும்பு, ஜனவரி 5**

**திட்டமிட்டபடி கல்விச் சீரமைப்பு நடைமுறைப்படுத்தப்படும் என்று பிரதமரும், கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

>>> 11

# செம்மணிக் குற்றவாளியை மீளச் சந்திக்கத் தீர்மானம்

## காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.5

செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பான மேலதிக தகவல்களைப் பெறும் நோக்கில் பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் பிரதான குற்றவாளியான மரணதண்டனைக் கைதி லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்சவை காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலு

>>> 10

# இலங்கைப் பொருளாதாரம் இந்த ஆண்டு மந்தமாகும்

## சர்வதேச நாணய நிதியம் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.5

இந்த ஆண்டு இலங்கையின் பொருளாதார வளர்ச்சி கணிசமாக மந்தமடைந்து 2.9 சதவீதமாகக் குறையும் என சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளது.

>>> 10

# சிறையிலுள்ள டக்ளஸை நலம் விசாரித்தார் நாமல்



கொழும்பு, ஜன.5

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முன்னாள் அமைச்சரும் தற்போது விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளவருமான டக்ளஸ் தேவானந்தாவை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச சந்தித்து நலம் விசாரித்துள்ளார். (எ-இ)

# இன்று முதல் வடக்குக்கு கனமழை கிடைக்கலாம்

யாழ்ப்பாணம், ஜன.5

வடக்கு மாகாணத்தில் இன்று முதல் எதிர்வரும் 12ஆம் திகதிவரை மீண்டும் மழைக்கு வாய்ப்புள்ளது என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. கடந்த 28ஆம் திகதி வங்காள விரிகுடாவில் இந்தோனேசியாவுக்கு

>>> 11

# பாடசாலைகள் இன்று ஆரம்பம்

கொழும்பு, ஜன.5

2026ஆம் கல்வி ஆண்டின் முதல் தவணையின் முதற்கட்ட நடவடிக்கைகளுக்காக அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலை

>>> 11

# பிரபாகரன் வீடிருந்த காணியில் நூலகம் அமைக்க விண்ணப்பம்

## வரலாற்றை அழிக்கும் செயல் என பல தரப்பினரும் விசனம்

யாழ்ப்பாணம், ஜன.5

வல்வெட்டித்துறையிலுள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன் வாழ்ந்த காணியில் நூலகம் அமைப்பதற்கு அனுமதி கோரி விண்ணப்பிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கு மக்களும், நகரசபை உறுப்பினர்கள் பலரும் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

அந்தக் காணியில் புதிய கட்டுமானத்துக்கு அனுமதி வழங்கினால், அது வரலாற்றை மாற்றியமைத்து

>>> 11

# எம்.பி.க்களின் ஓய்வூதியத்தை நீக்கும் சட்டவரைவு வெளியீடு

கொழும்பு, ஜன.5

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் துணைவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஓய்வூதிய உரிமைகளை இரத்து செய்வதற்கான ஓய்வூதியம் (நீக்குதல்) சட்டவரைவு வர்த்தமானியில் வெளி

>>> 11



# சதொசவின் முன்னாள் முகாமையாளர் கைது

விரிவு பக்கம்:-03

# நிக்கோலஸ் மதுரோ கைது ஜே.வி.பி. கடும் கண்டனம்!

கொழும்பு, ஜன.5

வெனிசுவேலாவில் அமெரிக்காவின் ஆக்கிரமிப்பையும், அந்த நாட்டின் ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ கடத்திச் செல்லப்பட்டதையும் ஜே.வி.பி. கடுமையாக கண்டித்துள்ளது.

ஆளும் தேசிய மக்கள் சக்தியின் பிரதான கூட்டணிக் கட்சியான ஜே.வி.பியால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்

>>> 11

# இன்று இலங்கை வருகிறார் இந்திய இராணுவத் தளபதி

கொழும்பு, ஜன.5

இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் உபேந்திர திவேதி மூன்று நாள்கள் பயணமாக இன்று இலங்கை வருகின்றார். ஐக்கிய அரபு எமிரேட்சுக்கான பயணத்தை நேற்று ஆரம்பித்த அவர், இன்று கொழும்பு வருவார் என இந்திய இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது. அவர், இலங்கை

>>> 11

முச்சந்தி முனி

"வீணையில தேள் கொட்டினால் தாமரைமொட்டுக்கு வலிக்கிற மர்மம் என்னெண்டு விளங்கேல கண்டியளோ"

# வடமாகாண வர்த்தகர்களுக்கு கடந்தாண்டு ரூ.2 கோடி தண்டம்

யாழ்ப்பாணம், ஜன.5

வடமாகாணத்தில் கடந்த ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபாரத்தில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கு மொத்தமாக 2 கோடியே 48 இலட்சத்து 40 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது என்று பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபையின் வடமாகாண உதவிப்பணிப்பாளர் அப்துல் லத்தீவ் ஜக்வார் சாதிக்

>>> 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 04.01.2026
சீட்டிழுப்பு இலக்கம் 4306
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள்: 35 57 64 77
விரோ எழுத்து

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி 04.01.2026
சீட்டிழுப்பு இலக்கம் 1373
வெற்றி இலக்கினம் சிம்மம்
வெற்றி இலக்கங்கள்: 16 30 46 51

**NLB ஜய**
திகதி 04.01.2026
சீட்டிழுப்பு இலக்கம் 0332
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள்: 6 4 1 6

**மெகா பவர்**
திகதி 04.01.2026
சீட்டிழுப்பு இலக்கம் 2412
ஆங்கில எழுத்து Y
சுப்பர் இலக்கம் 11
வெற்றி இலக்கங்கள்: 24 28 50 59

**மஹஜன சம்பத**
திகதி 04.01.2026
சீட்டிழுப்பு இலக்கம் 6064
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள்: 5 2 1 2 4 8

**தன நிதானய**
திகதி 04.01.2026
சீட்டிழுப்பு இலக்கம் 2094
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள்: 18 52 55 78
விசேட எழுத்து W

**அத சம்பத**
திகதி 04.01.2026
சீட்டிழுப்பு இலக்கம் 0639
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள்: 1 2 4 8

**சுப தவசக்**
திகதி 04.01.2026
சீட்டிழுப்பு இலக்கம் 0180
வெற்றி இலக்கினம் துலாம்
வெற்றி இலக்கங்கள்: 08 22 28

# புதிய அரசமைப்பு விவகாரத்தில் வெளிப்படைத்தன்மை அவசியம்

## ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட் தலைவர்கள் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஜன.5

**புதிய அரசமைப்பு உருவாக்கப் பணிகள் ஆரம்பிக்கப்படும் பட்சத்தில், தமிழர்களுக்கான தீர்வாக எதனை முன்வைக்கப் போகின்றனர் என்பது பற்றி முதலில் அரசாங்கத்தின் பிரதிநிதிகள் தமிழர் தரப்புடன் பேசவேண்டும். இந்த விடயத்தில் வெளிப்படைத்தன்மை அவசியம் என்று தமிழ்த் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.**

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான ஆரம்ப கட்டப் பணிகளை இந்த மாதம் மேற்கொள்வோம். நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்குப்புதிய அரசமைப்பின் ஊடாக தீர்வு காணப்படும். பொதுக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு சிறந்த பரிந்துரைகளை முன்வைக்கவேண்டும் என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிக்கையில்,

பல வருடகாலமாக பல்வேறு தரப்பினரால் பல வடிவங்களிலான தீர்வுத்திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. எனவே புதிய அரசமைப்பு உருவாக்கப்பணிகள் ஆரம்பிக்கப்படும் பட்சத்தில், தமிழர்களுக்கான தீர்வாக எதனை முன்வைக்கப் போகின்றனர் என்பது பற்றி முதலில் அரசாங்கத்தின் பிரதிநிதிகள் தமிழர் தரப்புடன் பேசவேண்டும். இதுவரையில் நாட்டை ஆட்சி செய்த அரசாங்கங்கள் தமிழர்களின் தேவைப்பாடுகளையும், கரிசனைகளையும் காது கொடுத்துக் கேட்கவில்லை. அதுமாத்திரமன்றி நாட்டு மக்கள் அனைவருக்கும் பொதுவான சட்டமாக உருவாக்கப்பட்ட அரசமைப்புகள், பெரும்பாலும் பெரும்பான்மையினத்தவருக்கு சார்பானவையாகவே உருவாக்கப்பட்டன.

எனவே அந்த அரசியல் கலாசாரத்தின் நீட்சியாக இம்முறை உருவாக்கப்படும் புதிய அரசமைப்பும் தமிழர்களின் நலன்களைப் புறந்தள்ளி, அவர்களது அனுமதியின்றித்தான் கொண்டுவரப்படுமா? என்ற கேள்வி தொக்கு நிற்கின்றது - என்றார்.

இதுகுறித்து புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவிக்கையில்,

புதிய அரசமைப்பு உருவாக்க விடயத்தில் ஆக்கபூர்வமாக, நேர்மறையான விதத்தில் ஏதேனும் நடக்கும் எனக் கருதவில்லை. சகல தரப்பினருடனும் வெளிப்படையான முறையில் பேச்சுகளை நடத்தி, தமிழர்களால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய நியாயமான தீர்வுத் திட்டத்தை உள்வாங்கி, புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் பட்சத்தில், அது பெரிதும் வரவேற்கத்தக்க விடயமாகும்-என்றார். (க-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி 04.01.2026 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் 0772
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கம் 0 4 8 5 8 1

**Super Ball**
திகதி 04.01.2026 தினம் ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 3038
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கம் 17 18 44 47

**சனிதா**
திகதி 04.01.2026 தினம் ஞாயிற்றுக்கிழமை
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கம் 10 21 65 70
வெற்றி வாரம் 5199

**SASIRI**
திகதி 04.01.2026 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் 0868
வெற்றி இலக்கம் 18 35 36

**லக்ன ராசி**
திகதி 04.01.2026 தினம் ஞாயிற்றுக்கிழமை
மகரம்
வெற்றி இலக்கம் 28 42 51 54
சீட்டிழுப்பு வாரம் 4750

**KAPRUKA**
திகதி 04.01.2026 தினம் ஞாயிற்றுக்கிழமை
ஆங்கில எழுத்து X
சுப்பர் இலக்கம் 10
வெற்றி இலக்கம் 19 36 55 57
வெற்றி வாரம் 2214

**அத கோடிபதி**
திகதி 04.01.2026 தினம் ஞாயிற்றுக்கிழமை
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கம் 08 21 71 76
வெற்றி வாரம் 2864

## மத்திய ஆபிரிக்காவில்
# மிரட்டிய கிளர்ச்சியாளர்கள்
## அசராத இலங்கை விமானப்படை




கொழும்பு,ஜன.5

மத்திய ஆபிரிக்கக் குடியரசில் ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் பணியில் ஈடுபட்டுள்ள இலங்கை விமானப்படையினர், கிளர்ச்சியாளர்களின் தாக்குதலுக்கு மத்தியில் 14 ஆபிரிக்க இராணுவத்தினரைப் பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.


மத்திய ஆபிரிக்காவின் பம்பௌட்டிப் பகுதியில் உள்ள தற்காலிகச் செயற்பாட்டுத் தளத்துக்கு அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டுசெல்லும் பணியில் இலங்கை விமானப்படையின் ஹெலிகொப்டர் ஈடுபட்டிருந்தது. இந்தப் பகுதி கிளர்ச்சியாளர்களின் கடும் அச்சுறுத்தலுக்கு உள்ளான இடமாகும்.

கடந்த டிசெம்பர் 31ஆம் திகதி ஹெலிகொப்டர் மூலம் அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டுசென்று தரையிறங்கிய தருணத்தில், அங்கிருந்த ஆயுதக் குழுவினர் பாதுகாப்புப் படைத்தளத்தின் மீதும், ஹெலிகொப்டர் மீதும் தாக்குதல் நடத்த முற்பட்டனர்.



இதனையடுத்து படைத்தளத்தில் இருந்து 14 ஆபிரிக்க இராணுவத்தினரை இந்தக் குழு பாதுகாப்பாக மீட்டு ஹெலிகொப்டரில் ஏற்றிக்கொண்டு பறந்தது. மீட்கப்பட்ட அனைவரும் ஓபோ பகுதிக்குக் கொண்டுவரப்பட்டனர்.

இந்தக் குழுவில் விமானியாக விங் கமாண்டர் நூரான் பெரேரா, இணை விமானியாக பிலைட் லெப்டினன்ட் ஷஃப்ரித் இக்பால், விமானப் பொறியியலாளராக பிலைட் லெப்டினன்ட் பிரவீன் ரத்நாயக்க மற்றும் குழு உறுப்பினர்கள் இணைந்திருந்தனர். ஆயுதக் குழுக்களின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் இலங்கை விமானப்படையினர் வெளிப்படுத்திய துணிச்சலான செயற்பாடு சர்வதேச ரீதியில் பாராட்டுகளைப் பெற்றுள்ளது. (க-இ)



# டினோஜா உயிரிழப்பு மகஜர் கையளிப்பு!

முல்லைத்தீவு, ஜன.5

முல்லைத்தீவு, சிலாவத்தையைச் சேர்ந்த சிறுமி குகனேசன் டினோஜாவின் மரணம் தொடர்பில் நீதியை நிலைநாட்டுமாறு கோரி சுதந்திர மனித உரிமைகள் அமைப்பின் பிரதிநிதிகளிடம் மனுவொன்று கையளிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட மாஞ்சோலை மருத்துவமனையின் அசமந்தப் போக்கால் குறித்த சிறுமியின் உயிர் பறிபோனதெனத் தெரிவிக்கப்பட்டு கடந்த 29ஆம் திகதி பொதுமக்களினால் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது. இந்தப் பேரணியிலேயே ஜனாதிபதி, சுகாதார அமைச்சர், மாவட்ட மருத்துவ அத்தியட்சகர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சுதந்திர மனித உரிமைகள் அமைப்பின் வடமாகாணப் பணிப்பாளர் புண்ணியமூர்த்தி ஆகியோருக்கும் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புதிய மின்னணுக் கடவுச்சீட்டு ரூ.5.5 பில்லியன் ஒப்பந்தம்!

**கொழும்பு, ஜன.5**
**இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தனது புதிய மின்னணுக் கடவுச்சீட்டுத் திட்டத்துக்காக சுமார் 5.5 பில்லியன் ரூபா பெறுமதியான ஒப்பந்தத்தை வழங்கத் தீர்மானித்துள்ளது.**

இந்தத் திட்டத்தின்கீழ் சர்வ தேச சிவில் விமானப்போக்கு வரத்து அமைப்பின் தரவுத் தளத்துடன் இணைக்கப்படக் கூடிய இரட்டைக் குறியாக்க பாதுகாப்பு அமைப்பு இதில் பயன்படுத்தப்படும்.
இதன்மூலம் இலங்கைக் கட வுச்சீட்டுகளின் நம்பகத் தன்மை சர்வதேச அளவில் உறுதிப்படுத்தப்படுவதுடன், வெளிநாடுகளில் குடிவரவுச் சோதனைகளை விரைவாக மேற்கொள்ளவும் வழிவகுக் கும்.
ஏற்கனவே 'e-passport' புத்த கங்களை வழங்கும் ஒப்பந்தம் நிறுவனமொன்றுக்கு வழங்கப் பட்டிருந்தபோதிலும் தொழில் நுட்ப மற்றும் விநியோகக் கோளாறுகள் காரணமாக ஏற்பட்ட தாமதத்தினால், தற் போது சாதாரண இயந்திரம் வாசிக்கக்கூடிய கடவுச்சீட்டுகள் தற்காலிகமாக வழங்கப்பட்டு வருகின்றன. புதிய ஒப்பந்தத் தின்மூலம் இந்த நிலை விரை வில் சீரடையும் என எதிர்பார்க் கப்படுகிறது.
2024 இல் ஏற்பட்ட கடவுச்சீட் டுத் தட்டுப்பாட்டினைத் தொடர்ந்து, இந்தப் புதிய மின் னணு நடைமுறையை இலங் கையின் குடிவரவுத்துறை செயற்படுத்தவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ச-இ)

## 2025ஆம் ஆண்டில் 397 யானைகள் பலி



கொழும்பு, ஜன.5
2025ஆம் ஆண்டில் மட்டும் இதுவரை சுமார் 397 யானைகள் உயிரிழந்துள் ளதாக சுற்றுச்சூழல் நீதி மையத்தின் நிர்வாக இயக்குநர் திலேனா பத்ரகோடா தெரிவித்துள்ளார். தேசிய யானைகள் கணக்கெடுப்பின்படி, இலங்கையில் மனித-யானை மோதல் முன்னெப் போதும் இல்லாதவகையில் அதிகரித்து வருவது கண்டறியப்பட்டுள்ளது. 2023 இல் 488 இறப்புகளுடன் ஒப்பிடும் போது, 2024 இல் 388 யானைகள் இறந்ததாக அதிகாரபூர்வ தரவு காட்டு கிறது. இந்த மரணங்கள் பெரும்பா லும் துப்பாக்கிச்சூடு, மின்சாரம் தாக்கு தல், ரயில் மோதல்கள் மற்றும் மனித செயற்பாடுகள் முதலான காரணங்க ளால் ஏற்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இது வாழ்விடங்கள் மற்றும் யானை வழித்தடங்களைப் பாதுகாப்ப தில் ஏற்பட்ட தோல்வியைப் பிரதிபலிக்கி றது என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ச)



## நான்காம் குறுக்குத்தெரு வீதி மக்கள் பாவனைக்குத் திறப்பு

யாழ்ப்பாணம்,ஜன.5
சாவகச்சேரிப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட நாவற்குழி வட்டாரத்தில், 300 வீட்டுத்திட்ட நான்காம் குறுக் குத்தெரு வீதி, மக்களது பாவனைக்காக நேற்றுமுன் தினம் திறக்கப்பட்டது.
பிரதேசசபையின் உபதவிசாளர் இ.யோகேஸ்வர னின் கோரிக்கைக்கு அமைவாக, வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் மாகாண குறித் தொதுக்கப்பட்ட 20 இலட்சம் ரூபா அபிவிருத்தி நிதியில் இந்த வீதி புனரமைக்கப்பட்டுள்ளது. வீதித் திறப்பு நிகழ்வில் சாவகச்சேரிப் பிரதேசசபைத் தவி சாளர் பொ.குகதாசன், உபதவிசாளர் இ.யோகேஸ் வரன் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்ட னர். (க-159)



## சதொசவின் முன்னாள் முகாமையாளர் கைது

கொழும்பு,ஜன.5
சதொசவின் முன்னாள் போக்குவரத்து முகா மையாளர் இந்திக்க ரத்ன மலல நிதிக்குற்ற விசாரணைப் பிரிவின ரால் கைதுசெய்யப்பட் டுள்ளார்.
சதொசவுக்குச் சொந்த மான லொறி ஒன்றை முறைகேடாகப் பயன்ப டுத்திய குற்றச்சாட்டுத் தொடர்பில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரி வித்துள்ளனர். (ச-இ)

## குமார் பொன்னம்பலத்தின் 26ஆவது நினைவேந்தல்

யாழ்ப்பாணம்,ஜன.5
அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலை வரும், வழக்கறிஞருமான மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 26ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு, கொக்குவிலில் அமைந்துள்ள பொற்பதி அறிவாலய மண்டபத்தில் இடம்பெறும்.
தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெறும் நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக் கப்பட்டுள்ளது. (க-66)

## இதயவீணை தூங்கும்போது....

குண்டு வெடிப்புக்குள்ள தப்பிப்பிழைச்சவன் குண் டூசிகுத்திசெத்தானம். எவ்வளவுதான்பெரியஆபத்துகளுக்க சுழிச்சாலும் ஏதோ ஒரு சின்ன விசயத்தில அம்பிடத்தான் வேணும். அப்பிடித்தான் வீணைக்காரரும் மாட்டி யிருக்கிறார். அவரில எத்தினையோ குற்றச்சாட்டுகள் இருக்குது. ஆக்களைக் கடத்தினது, கொலை செய்தது, கப்பம் கேட்டது, சுட்டது எண்டு என் னென்ன குற்றங்கள் இருக்கோ அதெல்லாம் அவரும், அவரின்ர வீணைக் கட்சியும் செய்தது எண்டு உலகத்துக்கே தெரியும். அவ்வ ளவு ஏன், உதயன் பேப்பருக்க புகுந்து ரண்டு பேரைச் சுட்டு, ஒப்பீஸையும் அடிச்சுநொருக்கி, கொம்பியூட்டர் எல்லாத்தையும் நாசமாக்கினது ஆரெண்டும் சனத்துக் கும் தெரியும், பொலிஸுக்கும் தெரியும், ஆமிக்கும் தெரியும், அப்ப இருந்த அரசாங்கங்களுக்கும் தெரியும். ஆனாலும் அவரில இதுகள் தொடர்பா ஒரு கேஸும் இல்லை. எல்லாத்தையும் வெட்டியாடி, வெண்டு போட்ட னெண்டு இருந்தவரை ஒரேயொரு துவக்கு இப்ப ஜெயிலுக்குள்ள தள்ளியிருக்கு.

'இதெல்லாம் சின்னக் கேஸ். கெதியில ஆள் வெளியில வந்திடும்' எண்டு கனபேர் கதைக்கினம். ஆனால் வீணைக்காரரை அவ்வளவு லேசில வெளியில விடுற ஐடியா அரசாங்கத்துக்கு இல்லை எண்டு விசய மறிஞ்சவை சொல்லுகினம். சிலவேளையில பிணை கிடைச்சாலும் கூட, இனிமேல் தொடர்ச்சியா கோர்ட்டுக் கும், தியேட்டர் ஒப்பிஸுக்கும் மட்டுமே அலையிறதில அவ ரின்ர காலம் போடும் எண்டு சொல்லுகினம். ஏனெண் டால் அவரைப் பிடிச்ச துவக்குக் கேஸை விட இன்னும் கனக்கக் கேஸுகளை திசைகாட்டி அரசாங்கம் தூசு தட்டிக் கொண்டிருக்காம். மஹிந்தவின்ர காலத்தில குப்பைத் தொட்டிக்குள்ள போடுப்பட்ட பைல் எல்லாத்தையும் எடுத்து, அதுகளை நோண்டுறது எண்டு திசைகாட்டிக்காரர் முடிவெடுத்திருக்கினம். அதில ஒரு கேஸ் ரேடியோ சிலோ னுக்குக் குடுக்கவேண்டிய கடன்.

முந்திச் சண்டை நடந்த காலத்தில ரேடியோ சிலோ னில ஒவ்வொருநாளும் பின்னேரத்தில 'இதய வீணை' எண்டொரு புரோக்கிராம் போறது. அதில எங்கட போராட் டத்தையும், இயக்கத்தையும் பற்றி இல்லாததும் பொல் லாததும் சொல்றதுதான் அந்தப் புரோக்கிராமின்ர நோக்கம். அப்ப இன்ரர்நெற்றோ, செல்போனோ, பேஸ்புக்கோ, வட்ஸ்அப்போ அவ்வளவு ஏன் கறண்டோ இல்லாக் காலம். எல்லாரும் டைனமோவில கறண்ட் எடுத்து ரேடியோ மட்டும் கேப்பினம். அதால ரேடி யோவில இயக்கத்தைப் பற்றி சனத்திட்ட பிழையாச் சொல்லி, அவையின்ர மனசை புலியளுக்கு எதிராத் திருப்ப உந்த 'இதயவீணை' புரோக்கிராம் மூலமா தலையால கிடங்கு கிண்டிப் பார்த்தவை. வருசக்கணக்கில இதயவீணை நடந்தது. பிறகு ஒரு கட்டத்தில புலிகளுக்கும், அரசாங்கத் துக்கும் இடையில பேச்சுவார்த்தை தொடங்க, இதய வீணை நிண்டுபோட்டுது. இப்ப அதுவும் பெரிய ஆப்பா வீணைக்காரருக்கு வரப்போகுதாம். அதில என்ன ஆப்பு எண்டுதானே கேக்கிறியள். அந்த இதயவீணை புரோக் கிராமை வீணைக்காரர் புறிம்பாத்தான் செய்தவை. அதுக்கும் ரேடியோ சிலோனுக்கும் சம்பந்தம் இல்லை. ஆனால் ஒரு புரோக்கிராமுக்கு இவ்வளவு காசெண்டு தீர் மானிச்சு 'கட்டணம் கட்டின விளம்பரம்' எண்ட மாதிரித் தான் அந்தப் புரோக்கிராம் செய்ய அனுமதி குடுபட்டிருக்கு. ஆனால் அப்ப வீணைக்காரரிட்ட இருந்த அதிகாரத்தா லையும், ஆயுதத்தாலையும் வெருட்டி, வருசக்கணக்கில அந்த நிகழ்ச்சியைக் காசே குடுக்காமல் செய்திருக்கினம். இப்ப அதுக்கு வட்டியோட கணக்குப் பார்த்தால் கோடிக்கணக்கில வருகுதாம், அதை ஏன் கட்டேலை எண்ட வழக்கும் வரப்போகுதாம். ஊழ்வினை எப்பிடியும், எந்த ரூபத்திலையும் வந்து உறுத்தாமல் போகாது எண்டது உண்மைதான் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆங்கிலப் புத்தாண்டு ராசிபலன்



## கடகம்

அடிமனதில் ஒன்றைக் குறிவைத்துவிட்டால் அதை அடையும் வரை ஓயாத நீங்கள், ஒருபோதும் முன்வைத்த காலைப் பின் வைக்கமாட்டீர்கள்.

உங்கள் ராசிக்கு இலாபஸ்தானமான 11ஆம் வீட்டில் உங்கள் ராசிநாதன் சந்திரன் உச்சம் பெற்றிருக்கும் நேரத்தில் இந்த 2026ஆம் ஆண்டு பிறப்பதால் உங்களின் நீண்டநாள் விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். அரைகுறையாக நின்றுபோன கட்டட வேலைகள் முழுமையடையும். கடன்தொல்லைகளிருந்து முழுமையாக விடுபடுவீர்கள். விலையுயர்ந்த தங்க அணிகலன்களை வாங்குவீர்கள். சொத்துப் பிரச்சினைகளைச் சுமுகமாகப் பேசித்தீர்ப்பீர்கள். மகனுக்கு எதிர்பார்த்த கம்பெனியில் வேலை கிடைக்கும். மூத்த சகோதர, சகோதரிகளால் ஆதாயம் உண்டு.

1.1.2026 முதல் 31.5.2026 வரை குருபகவான் ராசிக்கு 12ஆம் வீட்டில் நிற்பதால் விரயச்செலவுகள் வரக்கூடும். குடும்பத்தில் விட்டுக்கொடுத்துப் போகவும். யாரையும் குறை கூறவேண்டாம். 1.6.2026 முதல் 14.10.2026 வரை ராசிக்குள் நுழைந்து ஜென்ம குருவாக இருக்கிறார்.

சகோதரவகையில் அனுசரித்துப்போகவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. 14.10.2026 முதல் 31.12.2026 வரை குரு பகவான் ராசிக்கு 2ஆம் வீட்டுக்குச் செல்வதால் குடும்பத்தில் உங்கள் பேச்சுக்கு மதிப்பு, மரியாதை கூடும். ஓரளவு பணப்புழக்கம் உண்டு.

1.1.2026 முதல் 12.1.2026 வரை 6ஆம் வீட்டில் சுக்கிரன் மறைவதால் அடிக்கடி தூக்கமின்மை ஏற்படும். கௌரவச் செலவுகள் அதிகரிக்கும். பழைய பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பீர்கள்.

23.2.2026 முதல் 2.4.2026 வரை உங்கள் ராசிக்கு 8ஆம் வீட்டில் செவ்வாய் மறைவதால் மன அழுத்தம், டென்ஷன், உடல் சோர்வு வந்துபோகும். ராசிக்கு 9இல் சனி இருப்பதால் தந்தையாருக்கு உடல் நலம் பாதிக்கும். மனைவிவழியில் சொத்து வரும்.

டிச.4ஆம் திகதி வரை உங்கள் ராசிக்கு 2ஆம் வீட்டில் கேது நிற்பதால் பண விஷயத்தில் கறாராக இருங்கள். குடும்ப அந்தரங்க விஷயங்களை வெளியில் சொல்லவேண்டாம். கண்வலி வந்துவிலகும். 8ஆம் வீட்டில் ராகு நிற்பதால் அடிமனதில் ஒரு பயம் இருக்கும். விவாதங்களை தவிர்ப்பது நல்லது. பழைய வாகனம் வாங்காதீர்கள்.

டிச.5ஆம் திகதி கேது ராசிக்குள் வருவதால் லேசாக தலைச்சுற்றல் மற்றும் தலைவலி வந்து விலகும். பணிச்சுமை அதிகரிக்கும். ராகு 7ஆம் வீட்டில் அமர்வதால் தம்பதிக்குள் கருத்துவேறுபாடு வரும். வியாபாரத்தில் பங்குதாரர்களை அனுசரித்துப்போகவும். அயல்நாட்டுப் பயணம் சாதகமாக அமையும்.

இல்லத்தரசிகளுக்கு உறவினர் மத்தியில் மதிப்புக் கூடும். கன்னிப் பெண்களுக்கு தடைபட்ட கல்யாணம் முடியும். பெற்றோரின் நிலையறிந்து செயற்படுங்கள். மாணவர்கள் கவனமாக படித்து வெற்றிபெறுவீர். வியாபாரத்தில் போட்டிகள் அதிகரித்தாலும் அதைச் சமாளித்து இலாபம் ஈட்டுவீர்கள். வாடிக்கையாளர்களைக் கனிவாக நடத்துங்கள்.

வெளிநாட்டுத் தொடர்புடைய நிறுவனங்கள்மூலம் அதிரடி இலாபம் உண்டு. வேலையாட்களை முழுமையாக நம்பி பொறுப்புகளை ஒப்படைக்கவேண்டாம். எலக்ட்ரானிக்ஸ், கம்பியூட்டர், மூலிகை வகைகளால் அதிக ஆதாயம் அடைவீர்கள். கூட்டுத்தொழில் பங்குதாரர்கள் உங்களைப் புரிந்துகொள்வார்கள்.

உத்தியோகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். சக ஊழியர்களின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உங்களின் கடின உழைப்பை மேலதிகாரி புரிந்துகொள்வார். கணினித் துறையினருக்கு புதிய சலுகைகள் தேடிவரும். பார்வைக் கோளாறு, தசைப்பிடிப்பு நீங்கும். கலைத்துறையினருக்கு மூத்தகலைஞர்களின் ஆதரவு கிட்டும். பழைய நிறுவனங்களிலிருந்து அழைப்பு வரும். அரசால் பரிசு, பாராட்டு உண்டு.

மொத்தத்தில் இந்த ஆங்கிலப் புத்தாண்டு, சவால்களில் வெற்றிபெறுவதுடன் வருமானத்தையும் அதிகப்படுத்துவதாக அமையும்.



திருவெம்பாவை விரதத்தை முன்னிட்டு, சுன்னாகம் கதிரமலைச் சிவன் ஆலயத்தில், மார்கழித் திருவாதிரை உற்சவம் கடந்த சனிக்கிழமை பக்திபூர்வமாக இடம் பெற்றது. (க-66)



# திருவாசக விழா

கொடிகாமம், ஜன.5

மாணிக்கவாசகப் பெருமான் பாடிய திருவாசகத்தின் சிறப்பைப் போற்றும் திருவாசக விழா நாவற்குழியிலுள்ள திருவாசக அரண்மனை திருவாசக அரங்கத்தில் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சிட்னி, அவுஸ்திரேலியா இதய மருத்துவ நிபுணர் வை.மனோமோகன் சிவகௌரி தம்பதி உட்படப் பலர் கலந்துகொண்டனர். இசை ஆசிரியர் திருமதி புஷ்பலட்சுமி உமாசங்கர், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் கு.அனுஷன், தர்மிதா ஆனந்தரட்ணம், சிட்னி, அவுஸ்திரேலியா மருத்துவக் கலாநிதி சிவரதி கேதீஸ்வரன் ஆகியோரின் திருவாசக அர்ப்பணமும், திருமதி துஸ்யந்தி சுகுணனின் நெறியாள்கையில் உடுவில் நாட்டிய கலாகேந்திரா குழுவினரின் திருவாசக நாட்டிய அர்ப்பணமும் இடம்பெற்றது. (ச-41-159)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாகமுடியும். தந்தையின் தேவைகளை நிறைவேற்றி மகிழ்வீர்கள். மனதில் தன்னம்பிக்கை அதிகரிப்பதுடன் உற்சாகமும் பெருக்கெடுக்கும். துணிச்சலுடன் செயற்படுவீர்கள்.

**இடபம்:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர்ச்செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். உறவினர்கள்மூலம் சுபநிகழ்ச்சி ஒன்று ஏற்பாடாகும்.

**கடகம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாகமுடியும். வாழ்க்கைத்துணையின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.

**சிம்மம்:** தாய்வழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவார். அவர்மூலம் உங்களுக்குத் தேவையான உதவிகளும் கிடைக்கும்.

**கன்னி:** சகோதரர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மாலையில் நீண்ட நாள்களாக நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது. ஆனால், சிலருக்கு அதிகப்படியான செலவுகளால் கடன் வாங்க நேரிடும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும்.

**விருச்சிகம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தந்தைவழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும்.

**தனுசு:** மனதில் இனந்தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும்.

**மகரம்:** சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்குத் திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடவேண்டாம். சிலருக்குக் குடும்பம் தொடர்பான பணிகளுக்காக சற்று அலைச்சல் ஏற்படும்.

**மீனம்:** மன உறுதியுடன் செயற்படுவீர்கள். எதிர்பாராத பணலாபம் உண்டாகும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




## வளங்கள் மீதான ஆக்கிரமிப்பு...!

உலகின் ஆகப்பெரிய பெற்றோலிய இருப்பைக் கொண்ட நாடான வெனிசுலாவின் அதிபர் நிக்கோலஸ் மதுரோ, போதைப்பொருள் கடத்தல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் சார்ந்த குற்றச்சாட்டுகளின் அடிப் படையில் அமெரிக்காவால் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர் அங்கிருந்து போர்க்கப்பல்கள் மூலம் நாடு கடத் தப்பட்டு, நியூயோர்க் நகரின் 'உலகளாவிய' போதைப் பொருள் தடுப்பு மையத்தில் விசாரணைக்கு உட்படுத் தப்பட்டுள்ளார். குற்றப்பத்திரிகைகள், விசாரணைகள் என அடுத்தகட்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து, ஈராக்கின் சதாம், லிபியாவின் கடாபி போன்று மது ரோவும் கொல்லப்படுவார் என்பது நிதர்சனம்.

மனித உரிமை மீறல்கள், போதைப்பொருள் சார்ந்த குற்றச்சாட்டுகள் மதுரோவுக்கு எதிராகச் சுமத்தப் பட்டிருந்தன என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், அவர் ஏன் ஒரு நாட்டின் இறைமையை மீறி இன்னொரு நாட்டுப் படைகளால் கைதுசெய்யப்படவேண்டும்? சிம்பாப்வேயின் முன்னாள் அதிபர் றொபேட் முகாபே மீது சுமத்தப்பட்ட போதைப்பொருள் குற்றச்சாட்டு கள் அளவுக்கு உலகின் எந்தத் தலைவருக்கும் எதிராகச் சுமத்தப்பட்டதில்லை. ஆனால், அமெரிக்காவால் எந் தக் கெடுதலும் முகாபேயிற்கு நிகழ்ந்ததில்லை. மெச் சிக்கோவில் இருந்து போதைப்பொருள் கடத்தப் படுவதாகக் கூறிய ட்ரம்ப், மெக்சிக்கோவின் எல்லை யில் சுவரை எழுப்பும் முயற்சிகளையே மேற்கொண் டார். மாறாக மெக்சிக்கோவின் முன்னாள் அதிபர் களையோ அல்லது தற்போதைய அதிபர் கிளாடியல்லா வையோ கைதுசெய்யவோ அந்த நாட்டின் மீது தாக் குதல் நடத்தவோ எந்த எத்தனிப்பையும் வெளிப் படுத்தவில்லை. அமெரிக்காவின் 'கஷ்மா' வர்த்தக முக் கூட்டணியில் மெக்சிக்கோவும் பிரதான பங்காள ராகவே உள்ளது. இதையெல்லாம் ஒரு நேர்கோட்டில் வைத்துப் பார்க்கையில், மதுரோவின் கைது மனித உரிமை மீறல், போதைப்பொருள் சார்ந்த குற்றங்களால் நிகழவில்லை என்பதே வெளிப்படை.

வெனிசுலாவின் பெற்றோலியக் கிணறுகளில் அமெ ரிக்க நிறுவனங்கள் ஏராளமாக முதலிட்டிருந்தன. வெனிசுலாவின் பெற்றோலியத்தையும், தங்கத்தையும் அமெரிக்கா வகைதொகை இல்லாமல் சுரண்டித் தள் ளியது. இதற்கு முடிவு கட்டியவர்தான் மதுரோ. அவர் தனது நாட்டில் இருந்து அமெரிக்க நிறுவனங்களை அடியோடு துடைத்தெறிந்தார். வெனிசுலாவின் வளங் களை அரசுடமையாக்கி சோசலிசக் கொள்கையை அறிவித்தார். 'சோசலிசம்' என்ற சொல்லைக் கேட்டால், மண்ணெண்ணெய் பட்ட சாரைப்பாம்புபோல் துடிக் கும் முதலாளித்துவ நாடான அமெரிக்காவுக்கு இது கிலியை ஏற்படுத்தியது. அத்துடன், வெனிசுலாவின் வளங்கள் மீது ரஷ்யாவும், சீனாவும் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தன. குறிப்பாக அமெரிக்க டொலருக்கு அல் லாமல், தத்தமது சொந்த நாணயங்களில் இந்த நாடுகள் வர்த்தகத்தைச் செய்தன. இதனால் உலக ஒழுங்கு மாறியது. அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகள் அர்த்தமற்றுப் போயின. எனவே, மீண்டும் தம்மை நிலைப்படுத்தவேண்டுமாயின் மதுரோவை அகற்ற வேண்டும் என்ற கட்டாயத் தேவை அமெரிக்காவுக்கு எழுந்தது. அதுவே இந்தக் கைதுக்கும் கடத்தலுக்கும் பிரதான காரணம்.

பிரிக்ஸ் கூட்டணியில் வெனிசுலா இணைய முயன் றது. டொலருக்கு எதிரான வர்த்தகக் கொள்கை உடைய பிரிக்ஸ் கூட்டணியில் வெனிசுலா இணைந்தி ருந்தால், உலகத்தின் எதிர்காலத்தை ரஷ்யாவே தீர் மானித்திருக்கும். சீனா அதன் இணைச் சக்தியாக இருந்திருக்கும். இதனால் ஏற்பட்ட பதற்றம்தான் மதுரோ சிறைப்பிடிக்கப்படக் காரணம். ஆக, டொலரைத் தவிர்த்து எண்ணெய் வர்த்தகத்தில் ஈடு பட்ட சதாமுக்கும், கடாபிக்கும் நிகழ்ந்ததே மது ரோவுக்கும் நிகழ்ந்துள்ளது. போர் இடம்பெறுகின்ற இடங்களில், பிரச்சினைகள் இருக்கின்றனவோ இல்லையோ, வளங்கள் ஏராளம் இருக்கும். ஆதலால், அங்கு அமெ ரிக்கா வந்தே தீரும். இராணுவம், தொழில்நுட்பம், மருத்துவம் ஆகியவற்றைத் தவிர, இதர விடயங்களில், அமெரிக்கா தனது சொந்த வளங்களைப் பயன்படுத்திய வரலாறு இதுவரை இல்லை. இனியும் இருக்கப் போவதில்லை.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




### பொய்யாமொழி

**இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு**

**பொருள்:** இறைவன் என்பதற்குரிய பொருளைப் புரிந்துகொண்டு புகழ் பெற விரும்புகிறவர்கள், நன்மை தீமைகளை ஒரே அளவில் எதிர்கொள்வார்கள்.




## மாணவர்களின் எதிர்காலத்துடன் விளையாடுகின்றது அரசாங்கம்

### இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.5**

**கல்வி மறுசீரமைப்புப் பணிகள் ஆரம்பத்திலிருந்தே தவறாகவே முன்னெடுக்கப்படுகின்றன. 40 இலட்சம் மாணவர்களின் வாழ்க்கையுடன் அரசாங்கம் விளையாடிக் கொண்டிருக்கின்றது.**

என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், அண்மைக் காலங்களில் கல்வி மறுசீரமைப்புகள் தொடர்பில் வெளியிடப் பட்ட சுற்றுநிருபங்களை ஒன்று சேர்த்தால் புத்தகமொன்றை அச்சிட முடியும். நேர அட்டவணை தொடர்பில் மாத்திரம் 4 சுற்றுநிருபங்கள் வெளியிடப்பட்டுள்ளன. கல்வி மறுசீரமைப்புப் பணிகள் ஆரம்பத்திலிருந்தே தவறாகவே முன்னெடுக்கப்படுகின்றன. நாட்டின் கல்வி முறைமைக்கு மறுசீரமைப்பு அவசியம் என்பது இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வர முன்னரிலிருந்தே வலியுறுத்தப் படும் ஒரு விடயமாகும். 2023ஆம் ஆண்டு மாற்றப்பட்டிருக்கவேண்டிய பாடத்திட்டங்கள் மாற்றப்படவில்லை. ஆனால் அரசாங்கம் அது குறித்து கவனம் செலுத்தவுமில்லை.

மாணவர்களின் எதிர்காலத்துடன் விளையாடவேண்டாம் என்று அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம் - என்றார். (ச-இ)



## மகளிர் மருத்துவ சங்கத்தின் தலைவராக ருவந்தி பெரேரா

கொழும்பு.ஜன.5

இலங்கை மகப்பேற்றியல் மற்றும் மகளிர் மருத்துவ சங்கத்தின் 25ஆவது தலைவராக பேராசிரியர் ருவந்தி பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

'உயிர்வாழ்வு மற்றும் சிறந்த தாய் மற்றும் சேய் பராமரிப்புடன் வளமாக வாழ்தல்' என்ற கருப்பொருளின்கீழ் நேற்றுமுன்தினம் இந்தப் பதவியேற்பு விழா நடைபெற்றது. (ச)

## 10 புதிய மருந்துகளை அறிமுகப்படுத்தத் திட்டம்

இலங்கை அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனம் இந்த ஆண்டு சந்தையில் 10 புதிய மருந்து தயாரிப்புகளை அறிமுகப் படுத்தத் திட்டமிட்டுள்ளது.

இந்த ஆண்டில் சுமார் 4,000 மில்லியன் மாத்திரைகள் மற்றும் வில்லைகளை உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது, அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனம் 70 வகையான மருந்து தயாரிப்புகளை உற்பத்தி செய்கிறது. கடந்த ஆண்டு 3,625 மில்லியன் மாத்திரைகள் மற்றும் வில்லைகளை உற்பத்தி செய்து உயர்ந்த மருந்து உற்பத்தியை அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனம் பதிவு செய்துள்ளது என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச-இ)



## தேங்காய் ஏற்றுமதியில் 1 பில்லியன் டொலர் வருவாய்

கொழும்பு.ஜன.5

தேங்காய் மற்றும் தேங்காய் சார்ந்த பொருள்களின் ஏற்றுமதி மூலம் கிடைத்த அந்நியச் செலாவணி வருவாய் 1 பில்லியன் அமெரிக்க டொலரைத் தாண்டியுள்ளது என்று ஏற்றுமதி மேம்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

இந்த வருமானம் 2025 ஜனவரி முதல் ஒக்ரோபர் வரையிலான காலகட்டத்தில் 1,033.9 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது. இது 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது 43.83% குறிப்பிடத்தக்க அதிகரிப்பாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

**நாளை**

செவ்வாய்க்கிழமை - மார்கழி 22

06.01.2026

சுபநேரம் : 11.01 - 12.31

ராகுகாலம் : 03.31 - 05,01


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருச்சபைக் குருவுக்கு ஜேர்மனில் அங்கீகாரம்

யாழ்ப்பாணம்,ஜன.5
தென்னிந்தியத் திருச்சபை செனட் மாமன்றத்தின் முன்னாள் தலித் மற்றும் ஆதிவாசித்துறை இணை இயக்குநர் அருட்பணி. ஜெபசிங், ஜேர்மனியில் உள்ள ஒற்றுமைக்கான நற்செய்தி மையத்தின் இந்தியப் பிரிவுத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் .
ஜேர்மனியைச் சேர்ந்த தலைவர்கள் மற்றும் CSI, CNI ஆகிய இரு பேராலயங்களின் செனட் தலைவர்களுடன் நடைபெற்ற விரிவான நேர்காணல்களுக்குப் பின்னர் இவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். தென்னிந்தியத் திருச்சபையின் பிரதம பேராயர் ரூபன் மார்க், பொதுச் செயலாளர் பெர்னாண்டஸ் ரத்தின ராஜா மற்றும் பொருளாளர் பேராசிரியர் விமல் சுகுமார் ஆகியோரால் கடந்த வாரம் இவர் கௌரவிக்கப்பட்டுள்ளார். அருட்பணி ஜெபசிங் யாழ்ப்பாண தென்னிந்தியத் திருச்சபையின் குருவானவர்களில் ஒருவர் என்பதுடன் நெடுந்தீவு, கொழும்பு, வட்டுக்கோட்டை ஆகிய பிரதேசங்களில் அருட்பணியாளராகவும் கடமை புரிந்தவர் என்பது குறிப்பிடதக்கது. (க-113)

# கல்மடுக் குளத்தின் கழுவப்பட்ட மணல் விநியோகம் நாளைமுதல் ஆரம்பம்!

### கரைச்சிப் பிரதேசசபை அறிவிப்பு


கொழும்பு, ஜன.5
**கிளிநொச்சி கல்மடுக் குளத்தின் புனரமைப்புப் பணிகளின்போது பெறப்பட்ட கழுவப்பட்ட மணலை இன்றுமுதல் ஒரு டிப்பர் 54 ஆயிரம் ரூபாவுக்கு பொதுமக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கரைச்சிப் பிரதேசசபையின் தவிசாளர் அருணாச்சலம் வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், 2026ஆம் ஆண்டுக்கான கரைச்சிப் பிரதேசசபையின் பாதீடு பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து பல்வேறு பணிகளை நிறைவேற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.
வடமாகாண ஆளுநரின் வழிகாட்டலுக்கு அமைய, வர்த்தக நிலையங்களுக்கு அனுமதி வழங்குவதற்கு 'குடிபுகுதல் சான்றிதழ்' இனிக் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் விடயத்தில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. வீதியோரங்களில் கழிவு போடுபவர்கள், கழிவு வாய்க்கால்களில் கழிவுகளைப் போடுபவர்களுக்கு உடனடியாக தண்டப்பணம் அறவிடப்படும். வீதி விபத்துகளைத் தவிர்க்கும் பொருட்டு, நகரப்பகுதிகளில் மட்டுமன்றி கிராமப்புறங்களிலும் கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தும் பணிகள் தீவிரப்படுத்தப்படும்.
அத்துடன் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தீர்மானத்துக்கு அமைய, கல்மடுக் குளத்தில் கழுவப்பட்ட மேலதிக மணலை அகழ்ந்து விநியோகிக்கும் பொறுப்பு கரைச்சிப் பிரதேசசபைக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒரு டிப்பர் மணல் 54,000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது. வீட்டுத் தேவை மற்றும் சொந்தத் தேவைகளுக்காக மணலைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர், உரிய கிராம சேவையாளர் மற்றும் பிரதேச செயலாளரின் சிபாரிசைப் பெற்று சபையிடம் விண்ணப்பிக்கலாம்.
இந்த மணலினை கரைச்சிப் பிரதேசசபை எல்லைக்குட்பட்டவர்கள் மட்டுமே எதிர்வரும் 23ஆம் திகதி வரையில் பெற்றுக்கொள்ளமுடியும் - என்றார். (ச-113)

## குஞ்சுக்குளம் வாய்க்கால் வெள்ளத்தால் கடும் சிதைவு




முல்லைத்தீவு,ஜன.5
முல்லைத்தீவு - முள்ளியவளை வடக்கு குஞ்சுக்குளம் வாய்க்கால் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தில் பெரும் பாதிப்படைந்ததையடுத்து அருகிலுள்ள குடியிருப்புகள் மண்ணரிப்பை எதிர்கொண்டுள்ளன என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். குஞ்சுக்குளம் வாய்க்காலின் சீரமைப்புப் பணிகள் கடந்தாண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இருப்பினும் அண்மைய வெள்ள அனர்த்தத்தால் வாய்க்கால் மிக மோசமாகப் பாதிப்படைந்துள்ளது.
இதனால் வாய்க்காலின் அருகிலுள்ள குடியிருப்புக்காணிகளும், மண்ணரிப்பை எதிர்நோக்கியுள்ளன. வாய்க்கால் சீரமைப்புப் பணிகள் உரியவகையில் முன்னெடுக்கப்படாமையால் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் தெரியப்படுத்தப்பட்ட நிலையில், நேரில் சென்று ஆராய்ந்து குறித்த பாதிப்பு நிலைமையைச் சீர்செய்வது தொடர்பில் தம்மால் கவனம் செலுத்தப்படும் என்று தெரிவித்தார். (க-246)



## புதிய அதிபர் கடமையேற்பு

யாழ்ப்பாணம்,ஜன.5
நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயத்தின் புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ள நடராசா மயூரன், கடந்த முதலாம் திகதி தொடக்கம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (க-17)



சிவனுக்குரிய முக்கியமான விரதங்களில் ஒன்றான திருவெம்பாவை விரதத்தின் இறுதிநாளை முன்னிட்டு வரலாற்றுச் சிறப்பு மிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மார்கழித் திருவாதிரை ஆருத்ரா தரிசன உற்சவம் அடியவர்களின் பங்கேற்புடன் மிகவும் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-66)


திருநெல்வேலி முத்துமாரி அம்மன் ஆலயத்தில், திருவெம்பாவை முன்னிட்டு ஒன்பதாம் நாளான நேற்று முன்தினம் சுவாமி தேரில் ஆரோகணித்து வீதி வலம் வந்தார். (க-17)



## கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்த கலந்தாய்வு

புதிய ஆண்டில் வடக்கு மாகாணத்தில் உள்ள சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன.
வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் கிளிநொச்சி மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில், நுண்நிதிக்கடன் தாக்கங்களில் இருந்து மக்களைப் பாதுகாத்தல், கூட்டுறவுச் சங்கங்களின் எதிர்காலத்திட்டங்கள், எதிர்கொள்ளும் சவால்கள், மாவட்டங்களுக்கிடையிலான வட்டி வீத மாற்றம், அதற்கான தீர்வுகள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டன. கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டச் செயலர், வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், மாவட்டங்களின் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் மற்றும் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஔவையார் நினைவுதினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு

வவுனியா.ஜன.5

வவுனியா மாநகரசபையின் ஏற்பாட்டில், ஔவையாரின் நினைவுதினம் சின்னப்புதுக்குளம் பகுதியில் அமைந்துள்ள அவரது சிலையடியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.


நிகழ்வின் ஆரம்பத்தில் ஔவையாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து மாணவர்கள் மற்றும் அறிஞர்களால் நினைவுப்பேருரைகள் ஆற்றப்பட்டன. தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் கண்ணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உள்ளூராட்சிசபை உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (க-110)

## பால்குடப்பவனி

யாழ்ப்பாணம், ஜன.5

கல்வியங்காடு காளிகாதேவி சமேத வீரபத்திர சபரீச ஐயப்ப கோவில் பால்குடப்பவனி கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. சட்டநாதர் சிவன் கோவிலில் ஆரம்பித்த பவனி ஊர்வலமாக கல்வியங்காடு காளி காதேவி சமேத வீரபத்திர சபரீச ஐயப்ப கோவிலைச் சென்றடைந்தது. பெண்கள் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்ற பால்குடபவனியில் இணைந்தனர். தொடர்ந்து ஐயப்பனுக்கு விசேட அபிஷேகம் இடம்பெற்றது. (ச-41-20)






## மாணிக்கவாசகர் மடாலய நூற்றாண்டு ஆரம்ப விழா

யாழ்ப்பாணம்.ஜன.5

காரைநகர் ஈழத்துச் சிதம்பர மாணிக்கவாசகர் மடாலயத்தின் 100 ஆவது ஆண்டு ஆரம்பவிழா கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் மாணிக்கவாசகரின் பக்திப் பாராயணங்கள் இசைக்கப்பட்டன. பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து மாணிக்க வாசகரின் திருவுருவப்படம் திரைநீக்கம் செய்யப்பட்டு, மாலை அணிவிக்கப்பட்டது. நிகழ்வில் மாணிக்கவாசகர் மடாலயம் பற்றிய உரையை தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் ஆற்றினார். மாணிக்கவாசகர் மடாலயத்தின் குருக்களான ஈஸ்வரக்குருக்கள் பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டார். (க-27)

மீசாலைப் பகுதியில் டித்வா புயலினால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பமொன்றுக்கு சாவகச்சேரி நகர சபை கல்வயல் வட்டார உறுப்பினரான இ.யோகநாதன் தனது தந்தையின் 31ஆவது ஆண்டு நினைவாக உலருணவுப்பொருள்களை கடந்த வெள்ளிக்கிழமை வழங்கி வைத்தார். (ச-41- 9)




## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜன.5

சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் வருடாந்தத் திருவாசக முற்றோதல் நிகழ்வு யாழ். நீராவியடியில் அமைந்துள்ள சைவபரிபாலனசபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

நடராஜப் பெருமானுக்குச் சிறப்பு வழிபாடுகள்இடம்பெற்றதைத் தொடர்ந்து திருவாசகம் முற்றோதல் நிகழ்வைச் சைவப்புலவர் கந்த சத்தியதாசன் ஆரம்பித்துவைத்தார். (ச-41-66)





குரும்பசிட்டி முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழாவின், தேர்த்திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை பக்திபூர்வமாக இடம் பெற்றது. (க-66)

## சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட 11 வீதிகள் புனரமைப்பு பூர்த்தி!

சாவகச்சேரி, ஜன.5

சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் டித்வா புயலால் பாதிக்கப்பட்ட 11 வீதிகள் 2 கோடி ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு நிறைவடையும் நிலையிலுள்ளது என சபையின் தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஷ் தெரிவித்தார்.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியில் இந்த வீதிகள் புனரமைக்கப்பட்டன. மீசாலை மேற்கு கண்டி வீதி தொடக்கம் டச்சு வீதி வரையான காளிகோவில் வீதி உட்பட 11 வீதிகளின் புனரமைப்புப் பணிகளே இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக தவிசாளர் தெரிவித்தார். (ச-41-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் மாநகரசபை வரியிறுப்பாளர் கவனத்திற்கு....

வரியிறுப்பாளர்கள் தமது ஆதனங்களுக்கான 2026 ஆம் ஆண்டிற்கான ஆதனவரியை ஜனவரி 31 ஆம் திகதிக்குள் செலுத்தி 10% கழிவினையும், காலாண்டிற்கான ஆதனவரியினை அக்காலாண்டின் முதல் மாதத்தில் செலுத்தி 5% கழிவினையும் பெற்றுக்கொள்ள முடியும்

| விபரம் | செலுத்த வேண்டிய திகதி | கழிவுக்கு உரித்துப் பெறும் இறுதித் திகதி | கழிவு வீதம் |
|---|---|---|---|
| முழு ஆண்டுக்குமானது (01.01.2026 – 31.12.2026) | 01.01.2026 - 31.01.2026 | 31.01.2026 | 10% |
| முதலாவது காலாண்டு | 01.01.2026 - 31.03.2026 | 31.01.2026 | 5% |
| இரண்டாவது காலாண்டு | 01.04.2026 – 30.06.2026 | 30.04.2026 | 5% |
| மூன்றாவது காலாண்டு | 01.07.2026 – 30.09.2026 | 31.07.2026 | 5% |
| நான்காவது காலாண்டு | 01.10.2026 – 31.12.2026 | 31.10.2026 | 5% |

மேலும் யாழ் மாநகர வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி அலுவலக நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரையும், தைப்பொங்கல் தவிர்ந்த பொது விடுமுறை நாட்களிலும் வார இறுதி நாட்களிலும் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரையும் ஆதனவரியினைச் செலுத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.


2026 ஆம் ஆண்டிற்கான ஆதன வரி அறிவித்தல் (K form) கிடைக்கப் பெறாதவர்கள் அல்லது ஆதன வரி இதற்கு முன்னைய ஆதனவரி அறிவித்தல் ஆண்டிற்கான செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டு அல்லது ஆதனம் அமைந்துள்ள வட்டாரம், வீதி மற்றும் ஆதன இலக்கம் போன்ற விபரங்களை சமர்ப்பித்தும் 2026 ஆம் ஆண்டிற்கான ஆதன வரியைச் செலுத்த முடியும்.

இதே போன்றே கடந்த காலங்களுக்கான ஆதனவரி நிலுவைகளையும் செலுத்துவதன் மூலம் சேவைகளையும் இலகுவாக பெற்றுக் கொள்ள முடியும். 2025 ஆம் ஆண்டின் ஆதனவரிப் பெறுமதியிலும் கட்டணங்களிலும் மாற்றம் மேற்கொள்ளப்படவில்லை.

2026 ஆம் ஆண்டிற்கான ஆதனவரி அறிவித்தல்கள் முழுமையாக விநியோகிப்பதற்கான 31.12.2025 இருப்பினும் ஆம் திகதிக்குள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அலுவலக ஆதனவரி அறிவித்தல்கள் கிடைக்கப் பெறாதவர்கள் அலுவலக நாட்களில் நேரத்தில் யாழ் மாநகரசபையின் ஆதனவரி பகுதியுடன் தொடர் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

வி.மதிவதனி
மாநகர முதல்வர்
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 06.06.1930 | மறைவு 05.01.2013

### அமரர் வைத்தி கணபதிப்பிள்ளை

யாழ். மண்டைதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ். இல 16, மடம் வீதியை வதிவிடமாகவும் கொண்டிருந்த வைத்தி கணபதிப்பிள்ளை அவர்களின் 12ம் ஆண்டு நினைவஞ்சலி

ஆண்டு 13 ஆகிவிட்டது ஆறவில்லை எம் துயர்

ஆறவில்லை எம் துயர்
நிஜத்தில் நீங்கள் எம்முடன் இங்கில்லை
நினைவில் தினமும் எம்முடன் வாழ்கின்றீர்கள்
காலத்தால் எமை விட்டு நீர்ப் பிரிந்தாலும்
உம் நினைவு எமை விட்டுப் பிரியவில்லை
நாம் இங்கே தவித்து நிற்க
எமை விட்டுப் போன தெங்கேயோ?
அன்பில் உறைவிடமாய் ஆறுதலில் தந்தையாக
இன்சொல்லில் இனியவராக வாழ்ந்தவரே
வையகத்தே நீர் எமைப் பிரிந்து சென்றாலும்
வாடுகிறோம் இவ்வையகத்தில் நாமிங்கே!


உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்..

தகவல்:
Burgdorf, Swiss — குடும்பத்தினர் - க.கண்ணதாசன்

(CS 60377) E

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 22 . 09 . 1940



ஆண்டவன் அடியில் 03 . 01 . 2026

### சின்னத்தம்பி அருணகிரிநாதன்

(ஓய்வுபெற்ற காணி அதிகாரி)

பருதியகம், வட்டு மேற்கு, வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அருணகிரிநாதன் அவர்கள் 03.01.2026 சனிக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகசபை - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், அற்புதவதனி (ஓய்வு பெற்ற அதிபர் யா/வட்டு திருநாவுக்கரசு வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், அனிந்தினி (ஆசிரியை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி), ஜெயசுதன் (ஆசிரியர், கொழும்பு சென் பீற்றர்ஸ் கல்லூரி), அனுதரன் (சீநோர் யாழ்ப்பாணம்), அநபாயன் (ஆசிரியர், தாய்லாந்து அஸ்ரா அக்கடமி சர்வதேச பாடசாலை), அனுசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவநடராஜா (பிரதி நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), சத்யா (ஆசிரியை, கொழும்பு சென் அன்ரனீஸ் பாலிகா மகா வித்தியாலயம்), பிருந்தா (முன்னாள் ஆசிரியை - ரனபிம றோயல் கல்லூரி, பேராதனை), சுசிகலா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற நறுமலர் மற்றும் பேரின்பநாயகி (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரரும், காலஞ்சென்றவர்களான பொன்னையா, சதானந்தசிவம் மற்றும் ஸ்ரீஸ்கந்தராஜா, அற்புதராணி, ஸ்ரீஸ்காந்தா, காலஞ்சென்ற ஸ்ரீபாலகுமார் மற்றும் அற்புதகுமாரி அற்புதசாந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுபானுஜன், பவனுஜா, வைசிகன், தனிஸ்கன், சஞ்ஜேகன், தருணிகா, அபிநயா, அபிசாலினி, அபிசேரன், அபிரேகா, டிலக்சா, அபிஷன், அஸ்வின் சாய் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.01.2026 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.


(CS 60380) E

பருதியகம்,
வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்

| | | | |
|---|---|---|---|
| மனைவி | : 0766994934 | அனுதரன் (மகன்) | : 077481 0941 |
| ஜெயசுதன் (மகன்) | : 0777717892 | அநபாயன் (மகன்) | : [illegible] |
| அனிந்தினி (மகள்) | : 077954 8843 | அனுசன் (மகன்) | : [illegible] |

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 08.07.1943 | இறப்பு 05.01.2015

### அமரர் சிதம்பரப்பிள்ளை கனகசிங்கம்

(நொச்சிமோட்டை, ஓமந்தை, வவுனியா)

அன்பிலே சிறந்தவராய் மண்ணிலே உதித்து
அமைவுற்ற வாழ்வினில் நறுமணம் பரப்பி
இல்லத்தின் விருட்சமாய் உறவுகள் பேணிடும்
கருணை வடிவமாய் உரிமையாய் உணர்வை
அன்பாய் பகிர்ந்தே விண்ணக வாழ்வை நாடியே - சென்றீர்கள்
ஆண்டுகள் பதினொன்று பறந்தோடிச் சென்றதனால்
என்றென்றும் உங்கள் பாதம் போற்றி பணிந்திடுவோம்.

மனைவி - மலர்மாலை
கனகசிங்கம்.

(CS/60216) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
18
.
08
.
1963

மறைவு
03
.
01
.
2026

## குணரட்ணம் ஞானசேகரம்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், புதுவீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையை வசிப்படமாகவும் கொண்ட குணரட்ணம் ஞானசேகரம் அவர்கள் கடந்த (03.01.2026) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குணரட்ணம் - இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், மங்களேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் - தையல்நாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், சஞ்சிதா, சஞ்சீவன், கஜந்தன், கஜீவன், வினோதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சஜீவன், சுவேகா, சினோயா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அக்ஷயா, அகானா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான செல்வராணி, குணசீலன் மற்றும் பற்குணராஜா, காலஞ்சென்ற ஞானேந்திரன் மற்றும் நவரட்ணம், ஜெயராஜா, காலஞ்சென்ற செல்வராசா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற சறோஜாதேவி மற்றும் பிறேமினி, கௌசலா, கிருஜா, சுகன்ஜா, ஜெகதீஸ்வரன், மனோகரன், கைலாசநாயகி, கேதீஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொடர்பான தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

புதுவீதி, ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை. (CS/60382) J-1

தகவல்: குடும்பத்தினர்
கஜீவன் (மகன்) - 077 859 2852

# 3 மில்லியன் சுற்றுலாவிகள் இவ்வாண்டில் இலக்கு

கொழும்பு,ஜன.5
2026ஆம் ஆண்டில் 3 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதை இலக்காகக் கொண்டிருப்பதாக, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

2025ஆம் ஆண்டில் 2.4 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் என்ற இலக்கை எட்டியுள்ளோம்.

இந்த ஆண்டில் நாங்கள் 3 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை அடைய இலக்கு வைத்துள்ளோம். மேலும் 5பில்லியன்டொலர் வருவாயை எட்ட இலக்கு வைத்துள்ளோம் என்றும் அதன் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(ச-இ)

# வேலையாட்கள் தேவை

திருநெல்வேலியில் அமைந்துள்ள பிரதான உணவகம் ஒன்றிற்கு முழுநேர துப்பரவுப் பணியாளர்கள் தேவை. 45 வயதிற்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது

தொடர்புகளுக்கு: 074 251 7234

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 2 நாச்சிமார்கோவில் வீதி 154/135 எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் எம். இளையதம்பி என ஆதனப் பதிவேட்டில் காணப்படுகின்றது. இவ்வாதனத்தை யாழ்ப்பாணம் 54/03 இராமநாதன் வீதியைச் சேர்ந்த நாகமுத்து செல்லத்துரையும் பெண் றோசம்மாவும் ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு ப.யோ.அன்ரனி முகதாவில் 23.10.2011 ம் திகதி 152 ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 0 குளி 17.50 அளவு கொண்ட ஆதனத்தை அவர்களது மகள் செல்லத்துரை ஜெயந்தினிக்கு நன்கொடையளித்து ஆட்சியை ஒப்படைத்துள்ளனர்.

மேலும் இவ்வுறுதியில் இவ்வாதனம் எமது சொந்தமும் நீண்டகால ஆட்சியுமானதென்றும் வெளிப்படுத்தியுள்ளனர்.

ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை "ஆத்திக் குளத்திவோடையும் ஆத்திப்புலமும்" உத்தரவுபெற்ற நில அளவையாளர் ரி.தங்கராஜா அவர்கள் 25.09.2011 அன்று அளந்து தயாரித்த 4863 ஆம் இலக்க வரைப்படத்தில் துண்டு 1 என சுட்டப்பட்ட நிலப்பரப்பு 00 குளி 17.50 இற்கும் எல்லைகள்


கிழக்கு - அன்னமார் கோவில் ஒழுங்கை
வடக்கு - தம்பிராசா சுந்தரலிங்கத்தின் ஆதனம்
மேற்கு - சீனிவாசகம் குணரட்ணத்தின் ஆதனம்
தெற்கு - வேலு இரட்ணத்தின் ஆதனம் இதனடங்கலும்

தற்போது இவ்வாதனத்தை செல்லத்துரை ஜெயந்தினி என்பவர் தமது பெயரை எமது ஆதனவரிப் பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது செல்லத்துரை ஜெயந்தினி என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**முதல்வர்**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(CR 46828) E

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
17
.
11
.
1948

மறைவு
10
.
01
.
2023

## அமரர் இராசகாரியர் இலட்சுமிநாதன்

(முன்னாள் நீர்ப்பாசன இலாகா மேற்பார்வையாளர்)

திதி: திருதியை


ஆண்டுகள் மூன்று கடந்துவிட்டது அப்பா !
கண்ணிமைக்கும் நேரத்தில் நீங்கள் எம்மை விட்டுச் சென்றது
தாங்க முடியவில்லை அப்பா !
உங்கள் நினைவுகள் நீங்காது என்னேரமும் வந்து
எங்கள் நெஞ்சை வலிக்கச் செய்கின்றது அப்பா !
பெற்றவனும் நீயே பெயரிட்டவனும் நீயே ஊட்டி வளர்த்தவனும் நீயே
எங்கள் உயர்வுக்கு வழிகாட்டியவரும் நீயே அப்பா !
பாதை தவறாது பயணம் தொடர பாதை காட்டியவனும் நீயே அப்பா !
எங்கள் குடும்பத்தை தாங்கும் தூணாய் நின்றீரே அப்பா !
உங்கள் திருநாமம் எங்கள் உயிருடன் கலந்து நிற்கின்றது அப்பா !
எம் உயிர் உள்ளவரை நினைவுகள் அழியாது அப்பா !
காற்றிலே கலந்தாலும் காலமெல்லாம் உங்கள் ஆசீர்வாதமே
எங்கள் நிரந்தர துணை அப்பா !

ஆசிரியர் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி

நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(CS 60381) E

# மரண அறிவித்தல்



தோற்றம்
15
.
06
.
1943

மறைவு
04
.
01
.
2026

## செல்வி தேவமனோன்மணி குழந்தைவேலு

நாரந்தனை ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் கோகுலம் சங்கத்தானை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி தேவமனோன்மணி குழந்தைவேலு அவர்கள் 04.01.2026 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குழந்தைவேலு - பாக்கியம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான நவநீதம் தாமோதரம்பிள்ளை, விஸ்வேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற முருகேசு தாமோதரம்பிள்ளை மற்றும் செல்வராணி விஸ்வேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும், தேஜா கமலேஸ்வரன், தமோதரம்பிள்ளை முரளிதரன் ஆகியோரின் சிறியதாயாரும், சுதர்சன், குகதர்சன் ஆகியோரின் சின்னமாமியும், கமலேஸ்வரன், தனுஷியா முரளிதரன் ஆகியோரின் மாமியும், ஜூலியானா குகதர்சனின் சிறியதாயாரும், மயூரேசன், மயூரிக்கா, அகிலன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.01.2026 திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"கோகுலம்"
சங்கத்தானை,
சாவகச்சேரி

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 46837) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பீட்டளவில் கடந்த ஆண்டு விபத்து உயிரிழப்பு அதிகரிப்பு

கொழும்பு, ஜன.5
2024ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, கடந்த ஆண்டு வீதி விபத்துகளால் ஏற்பட்ட மரணங்களின் எண்ணிக்கை 322ஆல் அதிகரித்துள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப். யு. வூட்லர் தெரிவித்தார்.
இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ள தாவது-
2024ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 287 பெரும் வீதி விபத்துகள் இடம்பெற்றன. அவற்றில் 2 ஆயிரத்து 388 மரணங்கள் பதிவாகின. 2025ஆம் ஆண்டில் பதிவான பெரும் வீதி விபத்துகளின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 562 ஆக அதிகரித்துள்ளது. உயிரிழப்புகளின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 710 ஆக உயர்ந்துள்ளது.
போக்குவரத்து விதிமீறல்களைக் கட்டுப் படுத்துவதற்காக இலங்கைப் பொலிஸாரால் அறிமுகப்படுத்தப்பட்ட 'ETraffic' செயலியில் இந்த ஆண்டில் புதிய வசதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. யாராவது சட்டவிரோத முறையில் வாகனம் ஓட்டினால், அது தொடர்பாக ஒரு பாதசாரி, பயணி அல்லது மற்றொரு வாகனச் சாரதி இந்தச் செயலியின் மூலம் உடனடியாக பொலிஸ் தலைமையகத்துக்கு தகவல் வழங்கமுடியும்-என்றார். (எ-இ)

## இலங்கைப்...

டித்வா புயலின் தாக்கங்களின் காரணமாக, நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் சர்வதேச நாணய நிதியம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.
2026ஆம் ஆண்டில் 3.1 சதவீத பொருளாதார வளர்ச்சி பதிவாகும் என சர்வதேச நாணய நிதியத்தின் முன்னைய அறிக்கைகள் குறிப்பிடிருந்தன. ஆயினும் டித்வா சூறாவளி ஏற்படுத்திய பாதிப்புகளுக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட புதிய மதிப்பீடுகளின் அடிப்படையில், இந்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி 2.9 சதவீதம் வரை குறையும் என சர்வதேச நாணய நிதிய பணியாளர் கணிப்புகள் தெரிவிக்கின்றன.
டித்வா சூறாவளியால் ஏற்பட்ட சேதங்கள், மீளமைப்பு செலவுகள் மற்றும் பொருளாதாரச் செயற்பாடுகளில் ஏற்பட்ட தடை ஆகியவை, எதிர்வரும் கால கட்டத்தில் நாட்டின் பொருளாதார மீட்புக்கு பெரிய சவாலாக அமையும் என பொருளாதார வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (அ-எ-இ)

## செம்மணிக்...

வலக அதிகாரிகள் இந்த வார இறுதியில் சந்திக்கவுள்ளனர்.
பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் நீதிமன்றத்தால் பிரதான குற்றவாளியாகப் பெயரிடப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ச, அந்தப் படுகொலை தொடர்பாகவும், செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் தொடர்பாகவும் தன்னிடம் கூறிய விடயங்களை உள்ளடக்கியும், இந்த விவகாரம் தொடர்பில் மீண்டும் சுயாதீன விசாரணையைக் கோரியும் அவரது மனைவி எஸ்.சி.விஜேவிக்ரம கடிதமொன்றை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அனுப்பியிருந்தார்.
1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தில் இழைத்த குற்றங்கள், வலிந்து காணாமலாக்கப்படல்கள், மனிதப்புதைகுழிகள் மற்றும் அவற்றுக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களின் பெயர் விவரங்கள் உள்ளிட்ட சகல உண்மைகளையும் வெளிப்படுத்துவதற்குத் தயார் என்றும் சோமரத்ன ராஜபக்ச அறிவித்திருந்தார், இந்த விடயங்களுடன் தொடர்புடைய சில உண்மைகளையும், எதிர்வருங்காலங்களில் சாட்சியம் வழங்குவதற்குத் தயாராக உள்ள விடயங்களையும் உள்ளடக்கி கடந்த ஒக்ரோபர் மாதம் 4 ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலையில் சோமரத்ன ராஜபக்ச தனது சட்டத்தரணி முன்னிலையில் சத்தியக் கடதாசியும் வழங்கியிருந்தார்.
அதன் ஒரு பிரதி காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டதுடன் மேலும் இரு பிரதிகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க்கிடமும், ஆணையாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கிவரும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தின் அதிகாரிகளிடமும் கையளிக்கப்பட்டன.
கடந்த ஒகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி சோமரத்ன ராஜபக்சவை வெலிக்கடை சிறைச்சாலைக்குச் சென்று சந்தித்த காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்தின் அதிகாரிகள், கடந்த நவம்பர் மாதம் 26 அல்லது 27 ஆம் திகதி மீண்டும் அவரைச் சந்திப்பதற்கு சிறைச்சாலைகள் ஆணையாளரிடம் அனுமதி கோரியிருந்தனர். இருப்பினும் டித்வா சூறாவளியை அடுத்து அந்தச் சந்திப்புக்கான அனுமதி வழங்கல் தாமதமடைந்த நிலையில், சந்திப்பு இந்த வார இறுதியில் நடைபெறவுள்ளது. (அ-எ-இ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 30 • 06 • 1936



மறைவு 03 • 01 • 2026

### இராஜேஸ்வரி ஜீவரத்தினம்

பிள்ளையார் கோவிலடி, கொல்லங்கலட்டி, தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கு கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேஸ்வரி ஜீவரத்தினம் அவர்கள் 03.01.2026 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற கந்தையா ஜீவரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கிருஸ்ணசாமி-கனகாம்பிகை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா-சிவகாமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், சிவப்பிரியா (கனடா), சிவரஞ்சினி (உதவிப்பணிப்பாளர், தொழிற்துறைத் திணைக்களம்-வ.மா), சிவதர்சினி (ஆசிரியை யா/இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயபாலன் (கனடா). கிருபாகரன் (சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர், கட்டிடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம்), சிவரூபன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், கரவெட்டி) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற நாகேஸ்வரி, சண்முகராஜா, காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் அன்பு சகோதரியும் சோபிகா, நிலக்சிகா, சுரபி, அக்ஷரா, ஆதிரன் ஆகியோரின் பேத்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.01.2026 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் 8/3, கல்லூரி வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 28800) ER

தகவல்
குடும்பத்தினர்
077 [illegible]

கல்லூரி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 • 11 • 1947



மறைவு 03 • 01 • 2026

### நாகரத்தினம் சரஸ்வதி (சரசு)

புங்குடுதீவு 6ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், 103 சட்டநாதர் வீதி, நல்லூரை வசிப்படமாகவும் கொண்ட நாகரத்தினம் சரஸ்வதி அவர்கள் கடந்த (03.01.2026) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - இரத்தினம தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (செல்லையா) - அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற நாகரெத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், சுதர்சன் (சுவிஸ்), சுதாகரன், சுகந்தன், சுசிதரன் (கனடா), சுபாஜினி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயும், சங்கீதா (சுவிஸ்), தேவகி (ஆசிரியை யா/ யாழ் இந்து மகளிர் கல்லூரி), செல்வி, போல் நிர்மலதாசன் (நோர்வே) ஆகியோரின் மாமியாரும், சுஜிதா, உமாலயா, மாதவன், சதுர்யா, விவேகா, சேரன், மதுமிதா, ஆரண்யா, கரிஷ்மா, ஸ்ரீனா, ஸ்ரியான், சோபியா ஆகியோரின் பேர்த்தியும், சற்குணநாதன், காலஞ்சென்றவர்களான செல்வநாதன், தெய்வேந்திரன் மற்றும் பாக்கியலட்சுமி, பஞ்சரத்தினம், பத்மநாதன், மகாதேவன், சகாதேவன் ஆகியோரின் சகோதரியும், கமலாதேவி, பேபி, காலஞ்சென்றவர்களான யோகானந்தசிவம், கோபாலசுந்தரம் மற்றும் ராணி, சாவித்திரி மதி, காலஞ்சென்றவர்களான சற்குணம், கனகம்மா, தர்மபூபதி மற்றும் முத்தம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (07.01.2026) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: பிள்ளைகள்
சுதாகரன் (மகன்) - 077 6965156

103, சட்டநாதர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (CS/501) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய...

புதிய கல்விச் சீரமைப்புக்கு எதிர்ப்புகள் வெளிப்படுத்தப்பட்டு வரும் நிலையில் அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடத்தப்பட்ட ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையின் கல்வி முறையில் நீண்ட காலமாக நிலவி வரும் குறைபாடுகளை நீக்கி, மாணவர்களின் நடைமுறைத் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் 'ஐந்து முக்கிய துறைகளின்' கீழ் பெரும் கல்வி மறுசீரமைப்புகளை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இதற்காக 2026ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் 24 ஆயிரத்து 986 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் பெரும் பகுதி, அதாவது 17 ஆயிரத்து 542 மில்லியன் ரூபா பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகச் செலவிடப்படவுள்ளது.

எஞ்சிய நிதி பாடத்திட்ட மேம்பாட்டுக்கு 6 ஆயிரத்து 84 மில்லியன் ரூபா, மனிதவள மேம்பாட்டுக்கு ஆயிரத்து 26 மில்லியன் ரூபா, மதிப்பீட்டு முறைகளை நவீனமயப்படுத்த 298 மில்லியன் ரூபா மற்றும் விழிப்புணர்வுத் திட்டங்களுக்கு 36 மில்லியன் ரூபா எனப் பிரிக்கப்பட்டுள்ளது.

இதுவரை நடைமுறையிலிருந்த பரீட்சையை மாத்திரம் மையமாகக் கொண்ட மற்றும் பாடங்களை மனப்பாடம் செய்யும் முறைக்கு இந்த மறுசீரமைப்பு முற்றுப்புள்ளி வைக்கிறது. ஒரு கருவி தொடர்பாகப் புத்தகத்தில் படித்து அதன் பாகங்களை மனப்பாடம் செய்வதை விட, அந்த கருவியை நேரடியாக இயக்கிப் பழகும் நடைமுறைத் திறனை மாணவர்களிடம் வளர்ப்பதே இதன் பிரதான நோக்கமாகும். இதற்காகப் புதிய பாட அலகுகள் (Modules) மற்றும் நவீன வகுப்பறைச் செயற்பாடுகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

புதிய பாடத்திட்டங்கள் 2026ஆம் கல்வியாண்டில் அதிகாரபூர்வமாக நடைமுறைக்கு வருகின்றன. தரம் 6 மாணவர்களுக்கு ஜனவரி மாதம் 21 ஆம் திகதியிலிருந்தும், தரம் ஒன்று மாணவர்களுக்கு ஜனவரி மாதம் 29 ஆம் திகதியிலிருந்தும் புதிய பாடத்திட்டம் நடைமுறைக்கு வரவுள்ளது.

இவற்றுக்கு இணையாக, மாணவர்கள் புதிய பாடங்களைத் தெரிவு செய்தல் மற்றும் புதிய முறைமைக்கு அவர்களைத் தயார்படுத்துதல்போன்ற விழிப்புணர்வுத் திட்டங்கள் மாணவர்கள் மற்றும் பெற்றோருக்காக முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த மறுசீரமைப்பை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்காக நாடு தழுவிய ரீதியில் ஒரு லட்சத்து 32 ஆயிரத்து 580 ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்காக 7 ஆயிரத்து 181 ஆசிரியர் பயிற்றுவிப்பு பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

புதிய கல்வி மறுசீரமைப்புக்களை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்குத் தேவையான பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது தொடர்பாகவும் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது - என்றார். (அ-எ-இ)

## இன்று...

மேற்குப் பகுதியில் உருவான காற்றுச் சுழற்சி தற்போது தாழ்வு நிலையாக வலுப்பெற்றுள்ளதால், வடக்கு, கிழக்கு, ஊவா, மத்திய, வடமத்திய, சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களுக்கு இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை கனமானது முதல் மிகக் கனமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல் துறையின் தலைவரும், வானிலை ஆய்வாளருமான பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சியாக மழை கிடைக்கும் என்பதால் மத்திய மற்றும் ஊவா மாகாணங்களின் பல பகுதிகளிலும் நிலச்சரிவு அனர்த்தங்கள் இடம்பெறக் கூடும். ஆகவே, மக்கள் இதுதொடர்பில் மிகவும் விழிப்பாகவிருப்பது அவசியம். வடக்கு, கிழக்கு, மத்திய, வடமத்திய மாகாணங்களின் நீர்த் தேக்கங்களின் முகாமையாளர்கள் கனமழை தொடர்பில் அதிக கரிசனை கொள்வது விரும்பத்தக்கது.

இலங்கையின் வடக்கு, கிழக்கு, தென்கிழக்கு மற்றும் தெற்குக் கடற்பிராந்தியங்கள் எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதால் மீனவர்கள் கடலுக்குச் செல்வதில் மிக அவதானமாகவிருப்பது அவசியம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-எ-66)

## எம்.பி.க்களின்...

யிடப்பட்டுள்ளது. தற்போது நடைமுறையில் உள்ள 1977 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நாடாளுமன்ற ஓய்வூதியங்கள் சட்டத்தை இரத்துச் செய்வதே இந்த சட்டவரைவின் நோக்கமாகும்.

நீதியமைச்சர் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரின் உத்தரவின் பேரில் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. முன்மொழியப்பட்ட இந்த சட்டவரைவுக்கு அமைச்சரவை மற்றும் சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளதுடன், அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (அ-எ-இ)

## பாடசாலைகள்...

கள் மற்றும் பிரிவெனாக்களில் இன்று முதல் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

2026ஆம் கல்வி ஆண்டின் முதல் தவணை நடவடிக்கைகள், கடந்த டிசெம்பர் மாதம் 9 ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைவாக முன்னெடுக்கப்படும் எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

சிங்கள மற்றும் தமிழ் மொழிமூலப் பாடசாலைகளுக்கான 2025ஆம் கல்வி ஆண்டு, கடந்த டிசெம்பர் மாதம் 22 ஆம் திகதியும், முஸ்லிம் பாடசாலைகளுக்கு கடந்த டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதியும் நிறைவு செய்யப்பட்டிருந்தது. (அ-எ-இ)

## நிக்கோலஸ்...

டுள்ளதாவது:-

சுயாதீனமான, தன்னாதிக்கமுள்ள ஒரு நாடான வெனிசுவேலாவுக்குள் பலவந்தமாக அத்துமீறி பிரவேசித்து, அங்கு மக்கள் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டிருந்த ஜனாதிபதி நிகொலஸ் மதுரோ மற்றும் அவருடைய மனைவியை கடத்தி, ஐக்கிய அமெரிக்காவால் வெனிசுவேலாவுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இராணுவ ரீதியான ஆக்கிரமிப்பு சார்ந்த இடையீட்டை நாங்கள் கடுமையாக கண்டிக்கிறோம்.

உலகின் எந்தவொரு சுதந்திரமான, தன்னாதிக்கமுடைய நாட்டைப் போன்றே வெனிசுவேலாவிலும் எதிர்காலத்தை தீர்மானிக்கின்ற மற்றும் ஆட்சியாளர்கள் யார் என்பதை தீர்மானிக்கின்ற இறைமைத் தத்துவம் அந்த நாட்டு மக்களுக்கே உண்டு. அதை மீறுவதற்கு எந்தவொரு பலவானுக்கும் உரிமை இல்லை. நவீன சமூகமும் அரச ஆளுகையும் மிகவும் நாகரிகமுள்ளதாக அமைய வேண்டுமென்பது பொதுவான ஏற்றுக்கொள்ளலாகும். ஜனநாயகம், மனித உரிமைகள், அரசுகளின் சுதந்திரம் மற்றும் சுயாதீனத்தன்மை முழு உலகும் ஏற்றுக்கொள்கின்ற கோட்பாடுகளாகும். எந்த காரணத்தின் பேரிலும் அவற்றை மீறி, நாடுகள் மீது இராணுவ ரீதியான இடையீட்டைச் செய்வதோ அல்லது ஆக்கிரமிப்பை மேற்கொள்வதோ நவீன நாகரிக உலகத்தில் நியாயமானதாக அமையமாட்டாது.

அத்தகைய நிலைமைக்குள் ஐக்கிய அமெரிக்காவால் வெனிசுவேலாவுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பலவந்தமான இராணுவ இடையீட்டினை உலகில் எவருமே அனுமதிக்க போவதில்லை என்பதை நாங்கள் திடமாக நம்புகிறோம். எனவே, ஐக்கிய அமெரிக்காவால் வெனிசுவேலாவுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இந்த இராணுவ ரீதியான ஆக்கிரமிப்புக்கு கண்டனம் தெரிவிக்கின்ற மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த நாங்கள் வெனிசுவேலாவின் தன்னாதிக்க வழியுரிமைக்காகவும் சுயாதீனத் தன்மைக்காகவும் குரல் கொடுக்கிறோம் - என்றுள்ளது. (அ-எ-44)

## வடமாகாண...

தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடமாகாணத்தில் 3 ஆயிரத்து 174 சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டன. 3 ஆயிரத்து 62 வர்த்தகர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, நீதிமன்றங்களால் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் 619 சுற்றுவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டன. 617 வர்த்தகர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு வவுனியா நீதிமன்றத்தின் ஊடாக 66 இலட்சத்து 94 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் 818 சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டு, 801 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 77 இலட்சத்து 24 ஆயிரம் ரூபா தண்டமும், கிளிநொச்சி மாவட்டத்தில் 608 சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டு, 633 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 49 இலட்சத்து 89 ஆயிரத்து ஐந்நூறு ரூபாவும் தண்டமும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 591 சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டு, 532 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 31 இலட்சத்து 62 ஆயிரம் ரூபா தண்டமும், மன்னார் மாவட்டத்தில் 538 சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டு, 479 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 22 இலட்சத்து 71 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது. அதேவேளை கீரிச் சம்பா உட்பட அரிசி விற்பனை தொடர்பான வடக்குமாகாணத்தில் விசேட சுற்றிவளைப்புகளும் மேற்கொள்ளப்பட்டன - என்றார். (அ-எ-110)

## இன்று...

இராணுவத்தால் மரியாதை அணிவகுப்புடன் வரவேற்கப்படுவார்.

இந்தப் பயணத்தின்போது, இலங்கை இராணுவத் தளபதி, பாதுகாப்பு பிரதி அமைச்சர் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் போன்ற மூத்த இராணுவப் பிரமுகர்கள் மற்றும் சிவில் தலைவர்களுடன் இந்திய இராணுவத் தளபதி சந்திப்புகளை மேற்கொள்ளவுள்ளார்.

இலங்கையில் நடைபெறும் கலந்துரையாடல்கள் பயிற்சி ஒத்துழைப்பு, திறன் மேம்பாடு மற்றும் பிராந்திய பாதுகாப்பு ஆகியவற்றை மையப்படுத்தியதாக இருக்கும். இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்திற்குள் உறுதித்தன்மையைப் பேணுவதில் பகிரப்பட்ட முன்னுரிமைகளை வலியுறுத்தும்.

தனது செயற்பாடுகளின் ஒரு பகுதியாக, ஜெனரல் திவேதி புத்தலவில் உள்ள பாதுகாப்பு சேவைகள் கட்டளை மற்றும் பணியாளர் கல்லூரியில் உரை நிகழ்த்துவார். இந்த பயணத்தின் ஒரு கட்டமாக, ஜெனரல் திவேதி இலங்கையில் உயிரிழந்த இந்தியப்படையினரின் நினைவுச் சின்னத்தில் அஞ்சலி செலுத்துவார்.

மேற்கு ஆசியா மற்றும் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் உள்ள நட்பு நாடுகளுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துதல், பரஸ்பர நம்பிக்கையை மேம்படுத்துதல் மற்றும் இயங்குதன்மையை மேம்படுத்துதல் ஆகியவற்றில் இந்தியாவின் உறுதிப்பாட்டை மீண்டும் வலுப்படுத்தும் விதமாக இந்தப் பயணம் அமைந்துள்ளது என்றும் இந்தியா தெரிவித்துள்ளது. (அ-எ-44)

## பிரபாகரன்...

விடும் என்று பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். புதிய கட்டுமானங்களுக்கு அனுமதி வழங்கக்கூடாது என்றும் அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

வேலுப்பிள்ளை பிரபாகரன் வல்வெட்டித்துறையில் வாழ்ந்த அவரது இல்லம், அவரது அக்காவுக்கு தந்தை வேலுப்பிள்ளையால் சீதனமாக வழங்கப்பட்டுள்ளது. அந்தக் காணியில் புதிதாக நூலகம் மற்றும் மாடிக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்காக முன்னாள் தவிசாளர் ந. அனந்தராஜ் (அந்தக் காணியின் தற்போதைய அற்றோனிதத்துவக்காரர்) விண்ணப்பித்துள்ளார்.

வல்வெட்டித்துறை நகர உறுப்பினர் மயூரன் நகரசபை உத்தியோகத்தர்களிடம் கேள்வியெழுப்பிய பின்னரே இந்த விடயம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இந்த விடயம் தொடர்பாக நகரசபை அமர்வைக் கூட்டியே முடிவெடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

வேலுப்பிள்ளை பிரபாகரன் வாழ்ந்த வீடும், காணியும் தமிழ் மக்களின் வரலாற்றைத் தாங்கி நிற்கும் நிலையில், அங்கு புதிய கட்டுமானங்கள் மேற்கொள்ளப்படுவது, அந்த வரலாற்றை எதிர்காலச் சந்ததிகளுக்குத் தெரியாது அழிக்கும் செயல் என்று பிரதேச மக்களும், தமிழ் மக்களும் சுட்டிக்காட்டுகின்றனர். தமிழ் மக்களின் வரலாற்றை மாற்றியமைக்கும் செயற்பாடுகளைத் தவிர்க்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

இது தொடர்பாக வல்வெட்டித்துறை நகரசபைத் தவிசாளர் எம்.கே.சிவாஜிலிங்கத்திடம் கேட்டபோது, அனுமதிகோரி விண்ணப்பிக்கப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்தினார். ஆயினும் இதுவரை அதற்கான அனுமதி வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தார். (அ-எ-26)

**அறை வாடகைக்கு கொடுக்கப்படும்**

நல்லூரை அண்டிய சூழல்,
அரச/ தனியார் உத்தியோகத்தர் மற்றும்
படிக்கும் பெண் பிள்ளைகளுக்கு மட்டும்
அறை வாடகைக்கு கொடுக்கப்படும்.

(CS/502) J-1

தொடர்புகளுக்கு:-
077 858 3152, 075 881 0384

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் சிறை களஞ்சிய காப்பாளர் கைது

சிறைச்சாலைக்குள் இருந்து முன்னெடுக்கப்பட்ட போதைப் பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மஹர சிறைச்சாலையின் முன்னாள் களஞ்சியக் காப்பாளர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை எதிர்வரும் 6ஆம் திகதி வரை தடுத்து வைத்து விசாரணை செய்ய நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

(எ-இ)


## வீடு வாடகைக்கு தேவை

15 வருடகாலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் இடங்களில் வீடு வாடகைக்குத் தேவைப்படுகின்றது.

- சாவகச்சேரி (A9 பிரதான வீதி)
- கோப்பாய் (பருத்தித்துறை பிரதான வீதி)
- நெல்லியடி (பருத்தித்துறை பிரதான வீதி)
- சங்கானை (சண்டிலிப்பாய் சந்தியிலிருந்து சங்கானைச்சந்தி வரை)
- மானிப்பாய் (யாழ்ப்பாணம் மானிப்பாய் பிரதான வீதி)

தொடர்புகளுக்கு: 076 073 7397

(CS 60360) E

## Urgent Requirement
அவசர தேவை !

Sintha Construction (Pvt) Ltd.

### Accountant - 01 Position
கணக்காளர்

- Female candidates only
- Successfully completed the Advanced Level examination in the Commerce stream
- Age between 18 and 35 years
- Completed an accounting-related course
- Previous experience will be an added advantage

### Account & Administrative Assistant
கணக்கு மற்றும் நிர்வாக உதவியாளர்

- Female candidates only
- Successfully completed the Advanced Level examination in the Commerce stream
- Age between 18 and 35 years
- Completed an accounting-related course with Previous experience will be an added advantage

### Work Supervisor -01 Position
தள மேற்பார்வையாளர்

- Male candidates only
- Successfully completed the Advanced Level examination in the Maths/ Science stream
- Completed in any Civil Technical related course
- Previous experience will be an added advantage

களஞ்சிய பொறுப்பாளர் தேவை !

### Labour Supervisor - 01 Position
வேலைத் தொழிலாளர் மேற்பார்வையாளர்

- Male candidates only
- Successfully completed the Advanced Level examination .
- Previous experience will be an added advantage

A9 Road ,Moondrumurippu , vavuniya
077 2326 477 /070 5326 477


## மரண அறிவித்தல்



தோற்றம் 12 . 02 . 1934 — மறைவு 02 . 01 . 2026

### பொன்னுத்துரை நாகேஸ்வரி


அராலி தெற்கு வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை நாகேஸ்வரி அவர்கள் 02.01.2026 வெள்ளிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னுத்துரையின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான கண்மணி, வைத்தியநாதர், ஆச்சிமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும், தவமலர் (ஆசிரியை/அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரி), ஜெயமலர் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தயாரும், விஜயகுமார், பரணிகரன் ஆகியோரின் அன்பு மாமியும், நுஷாலி, விஷ்ணா ஆகியோரின் செல்லப் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.01.2026 திங்கட்கிழமை காலை 09.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 60376) E

## மரண அறிவித்தல்



தோற்றம் 06 . 12 . 1960 — மறைவு 04 . 01 . 2026

### நாகமுத்து மகேந்திரன்

(M.N.M அறிவு பட்டறை உரிமையாளர்)

யாழ்ப்பாணம், திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்படமாகவும் கொண்ட நாகமுத்து மகேந்திரன் (M.N.M அறிவு பட்டறை உரிமையாளர்) அவர்கள் நேற்று (04.01.2026) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான குணரட்னம் (குஞ்சர் குணம்) - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், அருந்ததி அவர்களின் அன்புக் கணவரும், நிருஜன் (Swiss), தனுப்பிரியா (Dan TV), சிலோயன், சித்திரப்பிரியா, சுஜிந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், டெல்சி பானியா அவர்களின் பாசமிகு மாமனாரும், கிறித்விக் அவர்களின் அன்புப் பேரனும், தெய்வேந்திரம், தங்கராஜா, காலஞ்சென்றவர்களான அருந்தவம், சற்குணராசா மற்றும் வைந்தவராசா, செல்வராசா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், குணவதி, காலஞ்சென்றவர்களான சுகுணா, சித்திரா, செல்வரட்ணம் மற்றும் சுரேந்திரா, கனிஷ்ரா, கலைவாணி, புவனேஸ்வரி, சிறி ஜனகன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.01.2026) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்


## ஸ்ரீபரமானந்தா சிறுவர் முதியோர் இல்லப் பணியாளர் வெற்றிடங்கள்

கீழ்க் குறிப்பிடப்படும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. நிர்வாக உத்தியோகத்தர்**

- வயது - 45 - 70 வயதுக்குட்பட்டவர்கள்.
- கல்வித்தகைமை - க.பொ.த உயர் தரத்தில் 3 பாடங்களில் சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட கல்வி.
- வசிப்பிடம் - கரவெட்டி பிரதேச செயலகப்பிரிவில் வசிப்பவர் விரும்பத்தக்கது.
- இப்பதவிகளுக்கான சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
- EPF,ETF வழங்கப்படும்.

**2. சிறுவர் அபிவிருத்தி நிலைய பெண் முகாமையாளர்**

- வயது 29-55வயதுக்குட்பட்டவர்கள்
- க.பொ.த. உயர்தரம் சித்தி மற்றும் பட்டதாரிகள்
- இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்றுதல் வேண்டும்.
- இப்பதவிகளுக்கான சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
- EPF,ETF வழங்கப்படும்.
- தங்குமிடம், உணவு இலவசம்.

குறிப்பு : கல்வித்தகைமை அனுபவச்சான்றிதழ் போட்டோ பிரதி போன்றவற்றுடன் விண்ணப்பிக்கப்படுதல் வேண்டும்.

(CR 116836) E

**விண்ணப்ப முடிவுத் திகதி : 30.01.2026**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி :
தலைவர்,
ஸ்ரீபரமானந்தா சிறுவர் முதியோர் இல்லம்,
வதிரி, கரவெட்டி.

தொலைபேசி இல :
0212263136, 0212265069, 0775147045




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.